# மக்கள் மறு வாழ்வு

மக்கள்
மறு வாழ்வு
சந்தா விபரம்
தனிப்பிரதி 75 காசுகள்
வருட சந்தா/ரூபா 10-00
விபரங்களுக்கு :
மக்கள் மறுவாழ்வு
சென்னை - 600 094.

மலர் 3] புரட்டாசி 1 — செப்டம்பர் 1985 [இதழ் 12


# திம்பு பேச்சில் மலையகத் தமிழர் பிரச்சனைப் பேச உரிமை இல்லை!

## ஈழ விடுதலை அமைப்புகளின் கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்தது

**மலையகத் தமிழர்களின் பிரதிநிதிகள் யாரும் கலந்துகொள்ளவில்லை என்று திம்பு பேச்சு வார்த்தையில் மலையகத் தமிழர் பிரச்சனைக் குறித்து பேச உரிமையில்லை என இலங்கை அரசு மறுத்து விட்டது, ஈழ மக்கள் கோரும் உரிமைகளை வழங்கவும் இலங்கை அரசு பழைய பல்லவியையே பாடி வருகிறது,**

பூடான் தலை நகரான திம்புவில் இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாகஆகஸ்ட் 12-ந் திகதி 2வது சுற்றுப் பேச்சுவார்த்தை துவங்கியது,

இப்பேச்சு வார்த்தையில், (1) தமிழ் மக்கள் தனிதேசிய இனம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். (2) சேர்ந்து வாழ்தல் அல்லது பிரிந்து போதலைஅங்கீகரிக்கும் தேசீய நிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளல். (3) மலையக மக்களின் குடியுரிமை உள்பட இதர அடிப்படை உரிமைகளையும் நிலை நிறுத்தல், (4) மலையகத்தில் உள்ளதமிழ் பேசும் மக்களுக்கானவாழ்நிலை உரிமை உண்டென்பதை ஏற்றுக்கொள்ளல் ஆகிய நான்கு கோரிக்கைகளையும் தமிழர் பிரதிநிதிகள் முன் வைத்து வலியுறுத்தி வருகின்றனர்,

மேற்கூறிய நான்கு கோரிக்கைகளையும் ஹெக்டர் ஜெயவர்த்தன தலைமையிலான இலங்கை அரசு குழு நிராகரித்து விட்டது.

தேசீய இனமாக அங்கீகரித்தல், சுயநிர்ணய உரிமை,மலையகத் தமிழர் குடியுரிமை மலையக் தமிழரின் வாழ்நிலை உரிமை ஆகிய முக்கிய நான்கு கோரிக்கைக்ளில் மூன்று கோரிக்கையை முற்றுக இலங்கை அரசு நிராகரித்து விட்டது,

மரபுவழி தாயகம் என்று கூறப்படுவது காரிய சாத்தியமற்றது என்றும் தமிழர்கள் பரவிச் சென்று இலங்கையின் பல்வேறு பகுதிகளில் குடியேற விட்டதாக கூறுகிறது.

மலையகத் தமிழர் குறித்த கோரிக்கைப்பற்றி இலங்கைத் தூதுக்குழுத் தலைவர் பேசுகையில், 94 ஆயிரம் பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்க இலங்கை உத்தேசித்துள்ளது, இந்திய குடியுரிமை வழங்கப் பட்ட இந்தியத் தமிழர்களை

(11-ம் பக்கம் பார்க்க)

## வங்கி அபிவிருத்தி குறித்து அறிய எம்.பி.கள் குழு வருகை தந்தது

**தா**யகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் நடைமுறைகள், அபிவிருத்தி குறித்து விவாதிக்க எம்.பி.கள் குழு ஒன்று சமீபத்தில் வந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு, மோகனரங்கம் எம்.பி. தலைமையில் வருகை தந்த குழுவினர் வங்கியின் தலைவர் U. S. நடராசன், இ.ஆ.ப. வங்கியின் நிர்வாக இயக்குனர் பொறுப்பில் தற்போது இருக்கும் மறுவாழ்வு இயக்குனர் திரு. குருமூர்த்தி, இ.ஆ.ப. மற்றும் வங்கி இயக்குனர் திரு. ஆர். எம. லிங்கம் ஆகியோர்களுடன் பேசினர்.

தாயகம் திரும்பியோர்களின் பல்வேறுபட்ட பிரச்சனைகளையும் வங்கியின் அபிவிருத்தியின் அவசியம் குறித்தும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் மறுவாழ்வு இயக்குனர் திரு, குருமூர்த்தி அவர்கள் ஒவ்வொரு எம்,பி, இடமும் வலியுறுத்தி கேட்டுக் கொண்டார். அவர்கள் அதற்குரிய நடவடிக்கைகள் எடுத்து மேலும் தாயகம் திரும்பியோர் களுக்கு உதவிகள் அளிப்பது குறித்தும், வங்கியின் அபிவிருத்திக்கு மேலும் உதவிகள் அரசு மூலம் கிடைக்க ஆவன செய்வதாக உறுதி அளிதுள்ளனர்.

மக்கள் மறுவாழ்வு

மலர் : 3 புரட்டாசி செப்டம்பர் 85 இதழ் : 12

# ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்!

தாயகம் திரும்பியோர்கள் மத்தியில் அமைக்கப்பட்ட பல்வேறுபட்ட அமைப்புகள் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இவைகள் இவற்றின் தகுதிக்கும், சக்திக்கும் உட்பட்ட வகையில் பரவலாக அல்லது குறிப்பிட்ட பகுதியில் சிலசில பணிகளை செய்து வருகின்றன.

ஆனால் இவற்றால் பொதுவாக தாயகம் திரும்யோர் மத்தியில் இருக்கத் கூடிய பிரச்சனைகளைத் தீர்க்க முடியவில்லை.

தாயகம் திரும்பியோர்களுக்கு கோடி கோடியாக அகதி பல உதவிகளை அளித்தாலும் சம்பந்தப்பட்ட தாயகம் திரும்பியோருக்குப் போய்ச் சேர்வதில்லை; பல்வேறுபட்ட சலுகைகள், முன்னுரிமைகள் இருந்தும் அவற்றை பயன்படுத்த முடியவில்லை; இந்த நாட்டில் புதிய சூழ்நிலையில், பழக்கப்படாத தொழில், வாழ்க்கை, சமூக அமைப்பு முறையில் முறையாகவும் சரியாகவும் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியாது திணறுகிறார்கள். தாயகம் திரும்புவோருக்காக உதவிகள் சலுகைகளை மட்டுமல்லாது; இந்த நாட்டு மக்களாகிவிட்ட இவர்கள் இங்கு பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், ஆதித்திராவிடர் போன்ற பின்தங்கிய மக்களுக்கும் இருக்கும் உதவிகளையும் சலுகைகளையும் முன்னுரிமைகளையும் கூட பயன்படுத்திக் கொள்ள முடியாத மக்களாக் இருக்கின்றார்கள்.

காரணம், அறியாமை, தெரியாமை, சக்தியின்மை, உரிய வழிகாட்டுதல் இன்மையே இதற்கு காரணம்,

இந்த நிலையில், இதையெல்லாம் உணர்ந்து இவர்கள் மத்தியிலுள்ள அமைப்புகள் வெவ்வேறு குழுக்களாக பணி செய்தாலும் பரஸ்பர நல்லுறவுடன் ஒருங்கிணைந்து செயலாற்ற முன்வர வேண்டும்—ஒருங்கிணைந்து இந்த மக்களுக்காக ஒற்றைக்குரல் எழுப்ப வேண்டும்.

அப்படி ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம்—குரல் எழுப்புவதன் மூலமே தாயகம் திரும்பியோர் தமது உரிமையையும், சலுகைகளையும் பெற முடியும் என்பதோடு இந்த நாட்டு மக்களோடு கலந்து தங்கள் வாழ்வில் மறுமலர்ச்சி காணமுடியும்,




## சேவைக்கு பாராட்டு

நிழல் படங்களுடன் ஆசிரமத்தின் நற்பணிகளை அழகான முறையில், தெளிவான நடையில், பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் எளிதில் நமது ஆசிரமத்தினைப் பற்றி அறிந்துக் கொள்ளும் வகையில் பிரசுரித்து எங்களைகௌரவித்தமைக் குறித்து இதயங்கனிந்த நன்றி மலர்களை தங்களுக்கு மாலைகளாக அணிவிக்கிறோம்.

தாங்கள் எங்களது ஆசிரமத்தைப் பற்றி பிரசுரத்ததினால் தங்க்ள் இதழை பயிலும் பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் ஆசிரமத்தைப் பற்றி எளிதில் அறித்துக் கொள்ள முடியும். மேலும் அவர்கள் ஆதரவற்ற குழந்தைகளின் நலனிற்காக ஏதாவது உதவிகளை செய்து தர முன் வருவார்கள்.

எனவே 300 குழந்தைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அக்குழந்தைகளும் தங்கள் பிஞ்சு உள்ளங்களிலிருந்து எழும் நன்றி என்ற மலர்களை மாலைகளாக தொகுத்து தங்களுக்கு இக்கடிதம் மூலம் அளிக்கின்றனர்.

எஸ், இராஜாராம்
நிர்வாகி, சிவானந்த சரஸ்வதி சேவாசிரமம்,
சென்னை-600059.

## மகத்தான நற்பணி!

மக்கள் மறுவாழ்வு இந்த ஆக்ஸ்ட் 1985 இதழில் 'மணமக்கள் தேவை' என்று ஒரு பகுதியை ஆரம்பித்துள்ளீர்கள். இதை முற்றிலும் வரவேற்கின்றோம். இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் இந்தியாவில் குடும்பங்களாக பிரிந்து பல மாநிலங்களில் தங்கள் வறுமையினால் வாழ்க்கையைத் துவங்கியுள்ளனர். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள் ஒரே இடத்தில் குடி அமர்த்தப்படவில்லை. தென் மாநிலங்களில் பிரிந்து வாழ்கின்றனர்.

அவர்களின் குடும்பங்களில் மண நாளை எதிர் நோக்கி கனவு கண்டு கொண்டுள்ள இளைஞர்கள் ஏராளம். தகுதி, இனம், வயது, பொருளாதாரம். இவைகளால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிவிடும் பலர் படும் வேதனை கண் முன்னே தெரிகிறது.

இவர்களுக்கு ஒரு விடிவு காலம் பிறந்து விட்டது. அது தான் மணமக்கள் மேடை இனி அவரவர் இஷ்டம் போல வரன்கள் மக்கள் மறுவாழ்வுமூலம்நிச்சயம் கிடைக்க வாய்ப்புண்டு. இந்த மகத்தான நற்பணியை ஆரம்பித்துள்ள மக்கள் மறுவாழ்வு இதழுக்கு தாயகம் திரும்பியோர் ஒவ்வொருவரும் நன்றி கடன் கூறக் கடமைப்பட்டுள்

ளார்கள் என்பதை வெளிப் படையாக கூறுவதில் ஐய மில்லை. இச்சேவை மூலம் பலர் பயன் பெற்று வாழ வளம் பெருக வாழ்த்து கிறேன்.

ஆர் வே வேணி
சோனன் கேரி
கர்நாடகா மாநிலம்.

## வாழ்த்துகிறேன்

நீங்கள் தொடர்ந்து இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களின் அவல நிலையை 'மக்கள் மறு வாழ்வு' மூலம் வெளிப்படுத்தி தாயகம் திரும்பியோரின் வழி காட்டி யாக விளங்கி வருவதைக் கண்டு நான் மகிழ்ச்சியடை கிறேன். தங்களுக்கு வாழ்த் துக்கள் சொல்ல கடமைப் பட்டவனாக இருந்து வரு கிறேன்.

லோக நாதன்
கீழ்க்கோத்தகிரி

## பயனுள்ள பகுதி

ஆகஸ்ட் இதழ் பல பய னுள்ள பகுதிகளை தாங்கி வந் துள்ளது. குறிப்பாக வீட்டுக் கடன், வியாபாரக்கடன் சம் பந்தப்பட்ட பிரச்னைகள் மற் றும் மாணவர் சேர்க்கையில் ஐந்து வருடம் என்ற காலக் கெடுவால் பாதிக்கப்படுபவர் களின் நிலைமைகளையும் தெளி வாக தெரிவித்துள்ளமைக்கு எமது சங்கத்தின் சார்பிலும் பாராட்டுகளை தெரிவிக் கிறேன். இதே நேரத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி இக் கோரிக்கைகளை நிறைவேற்று வார்கள் என்று நம்புகி றேன்.

மற்றும் இவ்விதழில் புதி தாக ஆரம்பித்துள்ள மண மக்கள் தேவை பகுதி தாய கம் திரும்புவோர்களுக்கு பயனுள்ள பகுதியாக விளங் கும் என்பதில் சிறிதும் ஐய மில்லை. மக்கள் மறு வாழ்வு பத்திரிகையின் வளர்ச்சியில் என்றும் எமது பங்கு தொட ரும் என்பதை பெருமை யுடன் கூறிக் கொள்கி றேன்.

அந்தோனி சாமி
தலைவர்,
இலங்கை அகதிகள்
மறு வாழ்வு சங்கம்,
அம்பத்தூர்.

## தாயகம் திரும்பியோருக்கு

# மறுவாழ்வளிப்பில் மாற்றாந்தாய்மனப்பான்மை

தாயகம் திரும்பியோர் களுக்கு மறு வாழ்வு உதவி கள் அளிப்பதில் மாற்றாந் தாய் மனப்பான்மை காட்டப் படுகிறது. அகதிகளுக்கு காட்டப்படும் அக்கறை ஒப்பந்த அடிப்படையில் இந் நாட்டிலேயே வந்து குடி யேறும் தாயகம் திரும்பிய மக்களுக்கு காட்டப்படுவ தில்லை என்று பலர் குமுறு கிறார்கள்.

1964-ம் ஆண்டு இலங்கை பிரதமராக இருந்த சிறி மாவோ பண்டார நாயகாவுக் கும், இந்தியாவின் அப் போதைய பிரதமராக இருந்த லால் பகதூர் சாஸ்திரி நடந்த ஒப்பந்தத்தின் அடிப்படை யில் இந்தியாவுக்கு வருகிற வர்கள் தாயகம் திரும்புகிற வர்கள் என்று அழைக்கப் படுகிறார்கள்.

## உதவிகள் பலவகை

அரசு இவர்களுக்கு நிரந் தரமாக குடியேறும் வகை யில் நிரந்தரமான மறு வாழ்வு உதவிகளை அளித்து வருகிறது.

வீட்டுக்கடன், வியாபாரக் கடன் முதலாக வேலை வாய்ப்பு, கல்விச் சலுகை முன்னுரிமைகள் என்று பல் வேறுபட்ட மறுவாழ்வு உதவி களை அளித்து வருகிறது.

ஆனால் சமீபகாலமாக தாய கம் திரும்பியோர்கள் மாற்றாந் தாய் மனப்பா ன்மையோடு நடத்தப்படுவதோடு இவர் களது மறு வாழ்வு திட்டத் தில் அக்கறையின்மை காட் டப்பட்டு வருவதாக பலர் தெரிவிக்கிறார்கள்.

## அகதிகளுக்கு உதவிகள்

83ல் இலங்கையில் நடந்த இனக் கலவரத்திற்கு பின் எல்லாம் இழந்து உயிரை மட் டும் பிடித்துக் கொண்டு வரும் அகதிகளுக்கு (வன்மையில் பாதிக்கப்பட்டு வரும் இலங் கைவாழ் குடியுரிமையுள்ளதமி ழர்கள் இவர்கள் திரும்பிச் செல்லத் தகுதியுடையோர் இவர்களே அகதிகள் என்று சொல்லப்படுகிறவர்கள்) துரித மான நிவாரண உதவிகள் அளிக்கப்பட்டு வருகிறது; வீடு கள் கட்டப்பட்டு குடியமர்த் தப்படுகிறார்கள்; மருத்துவம் பொறியியல் முதலான கல்வி பெற இட ஒதுக்கீடுகள் முத லான பல சலுகைகள் வழங் கப்பட்டுள்ளன.

## மரியாதை; சேவை

அகதிகளுக்கு அளிக்கப் படும் அக்கறை—உதவிகள் — தாயகம் திரும்பி இங்கு நிரந் தரமாக வாழப்போகும் மக்க ளுக்கு அளிக்கப்படுவதில்லை என்பது தாயகம் திரும்பி யோர்களின் குறை.

அகதிகள் உதவிகள், சலு கைகள் பெற அளிக்கப்படும் விளம்பரங்கள் தாயகம் திரும் பியோர்களுக்கு அளிக்கப்படுவ தில்லை என்பதோடு, சம்பந் தப்பட்ட அரசுதுறை அதிகாரி அவர்களுக்கு காட்டும் 'மரி யாதை'யையும் செய்யும் சேவையையும் தாயகம் திரும் பியோர் மத்தியில் காட்டுவ தில்லை என்பதோடு நாயை விரட்டுவது போல விரட்டவும் செய்கிறார்கள் என்பது பலர் தெரிவிக்கிறார்கள்.

## திட்டங்கள் எதுவுமில்லை

தாயகம் திரும்பியோர்களின் மறுவாழ்வுக்காக ஒதுக்கப் கப்படும் நிதிகள் கூட அகதி கள் நலன்களுக்காகவே செல வழிக்கப்படுவதாக நம்பகமாக செய்திகள் அடிப்படுகின்றன. இதனால் தாயகம் திரும்பி யோர்களைப் பொறுத்தவரை இனி எந்தத் திட்டங்களும் இருக்காது என்றும் அச்செய் திகள் தெரிவிக்கின்றன.

## பரிந்துரை வழங்குவதில்லை

வேலை, கல்வி போன்றவற் றிற்கு எத்தனையோ சலுகை சலுகைகள், முன்னுரிமை அரசாணைகள் இருக்கின்றன. இந்த அடிப்படையில் ஏதே னும் ஒன்றுக்கு பரிந்துரை (சிபார்சு) செய்யும்படி கேட் டால் ஒப்புக்கு ஒரு கடிதம் கொடுக்கிறது— இது சாதா ரணமாக எல்லா அலுவலங்களி லும் அனுப்புகிறகடிதம் மாதிரி தான்—'உரிய நடவடிக்கை எடுங்கள்' 'என்று சம்பந்தப் பட்ட அரசாணையைக் காட்டி எந்த பரிந்துரையும் வழங்குவ தில்லை.

## பராமுகம் காட்டுவதேன்

இப்படி சலுகைகள், முன் னுரிமைகள் இருந்தாலும் அதன் அடிப்படையில் தாய கம் திரும்பியோருக்கு உதவி கள் வழங்க அதிகாரிகள் பரா முகம் காட்டுகின்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க)




# ஒப்பந்தப்படி தாயகம் திரும்ப வேண்டியவர்கள் அகதிகளாக திரும்பி வந்து அவதிப்படுகிறார்கள் !

இலங்கை அகதிகள் பற்றியும், தாயகம் திரும்பியவர்கள் பற்றியும் இந்திய அரசு உட்பட சமூக சேவை நிறுவனங்களும் பல நிவாரண சேவைகளை மேற்கொண்டிருக்கும் இவ்வேளை இலங்கை - இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு ''தாயகம் திரும்பியஇலங்கை அகதிகள்'' நிலை என்ன? என்பது பற்றிய சில விபரங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்

இலங்கை இந்திய ஒப்பந்த படி தாயகம்திரும்புவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து புறப்பட தயாராய் இருந்த நேரத்திலும், ஒரு சிலர் ஒப்பந்த அடிப்படை சான்றிதழ்களுக்காக (பாஸ் போர்ட்—குடும்ப அட்டை) காத்திருந்த நேரத்திலும், சில குடும்பத்தினர் குடும்பத்தில் உள்ளவர்களை முன்கூட்டியே தாயகம் அனுப்பி விட்டு தங்கள் குடும்பத்திற்கு தேவையான ஆவணங்களை பெறுவதற்காக எத்தனித்திருந்த நேரத்திலும் தான்—

1983ம் ஆண்டு ஜூலை இனக்கலவரம் பூகம்பமாக வெடித்தது. இக்கலவரத்தில் உயிர், உடமை, கற்பு அனைத்தும் இழந்து பெரும்பானோர் அகதிகளாக ஆக்கப்பட்டு, முகாம்களில் தஞ்சம் புகுந்தனர், இப்படி அகதிகளாக் கப்பட்டவர்களில் தாயகம் திரும்ப வேண்டிய மேற்குறிப்பிட்டவர்கள் அடங்குவார்கள்

இலங்கை முகாம்களில் இந்திய தூதரகத்தின் மூலம் தாயகம் திரும்ப வேண்டியவர் பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டார்கள், இவர்களில் நேரு-கொத்தலாவலை ஒப்பந்தஅடிப்படையில் உள்ளவர்களும் ஸ்ரீமாவோ—சாஸ்திரி ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பித்தவர்களும், குடும்ப அட்டையின்றி பாஸ்போர்ட் மாத்திரம் கையில் வைத்திருந்தவர்களும், உறவினர்களில் யாரேனும் ஒப்பந்த அடிப்படை பாஸ்போர்ட்பெற்றிருந்தால் அவர்களின்பாஸ்போர்ட் இலக்கத்தை வைத்து இந்திய தூதரகத்தால் வழங்கப்பட்ட அவ்சரகால பாஸ்போர்ட் பெற்றவர்களும் நாடற்ற பிரஜைக்கான இலங்கைத் தூதரகம் வழங்கிய அறிமுகஅட்டை (ஐடண்டி கார்ட்) பெற்றவர்களும் அகதிகளாக தாயகம் அனுப்பப்பட்டார்கள்.

அப்படி வந்தவர்களில் ஒப்பந்த அடிப்படையிலான அனைவருக்கும் மண்டபம் முகாமில் மாற்று குடும்ப அட்டையும், சகல நிவாரண உதவியும் அளிக்கப்படும் என்று இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக மறுவாழ்வுஅதிகாரிகளால் கூறப்பட்டது.

ஆனால் முதன் முதலில் தூத்துக்குடியில் வந்திறங்கியவர்களும், அதனைத் தொடர்ந்து மண்டபம் முகாமுக்கு வருகை தந்தவர்களும் அகதிகளாக பதிவு செய்யப்பட்டு சகல அரசு சலுகையும் பெற்று வந்தார்கள். அவர்களில் தாயகம் திரும்பியவர்களுக்கு மாற்றுக் குடும்ப அட்டை வழங்க ஏற்பாடு செய்வதாக அதிகாரி கணக்கெடுப்பு நடத்தி விவரங்கள் சேகரித்ததும் குறிப்பிடத்தக்கது,

1984ம் ஆண்டு தாயகம் திரும்பிய இலங்கை அகதிகளில் ஒருசிலர் மாதக் கணக்கில் மண்டபம் முகாம் வாசலில் தவம் கிடந்து அகதிகளாக சேர்க்கப்பட்டார்கள். இப்படி தாயகம் திரும்பிய அகதிகளுக்கு மறுவாழ்வு நிவாரண உதவிகள் செய்ய அரசு அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொண்டு கண்டியில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் தொடர்பு கொண்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன் விளைவு, ஒரு வருடத்திற்கு மேலாக மாற்றுக்குடும்ப அட்டைக்காக சிலர் இன்னும் மண்டபம் முகாமில் காத்துக் கிடக்கிறார்கள். சிலருக்கு மாற்று குடும்ப அட்டை வழங்கப்பட்டு, மறுவாழ்வு உதவியாக வியாபாரக்கடனும் வழங்கப்பட்டு அவர்கள் முகாமை விட்டு வெளியேறி மூன்று மாதத்தின் பின்னர் காசோலை மாற்ற வந்த போது மீண்டும் மண்டபம் முகாம் அதிகாரிகள் விசாரணை என்ற பெயரில் காசோலையை பறித்து வைத்துக்கொண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு எந்த சலுகையும் இன்றி முகாமுக்குள் பதிவும் இன்றி அலைய வைத்துக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. உதாரணத்திற்கு உத்திராட்சமணி (கடவுச்சீட்டு எண்; Y 095356) மேலும் தொடர்ந்து ஒரு வருடத்திற்கு மேல் அகதிகளாக இருந்த சில தாயகம் திரும்பிய அகதிகளை அவர்களின் உறவினர்களில் யாரோ, குடும்ப அட்டையில் சலுகை பெற்றுள்ளார்கள் என்று கூறி, அதிகாரிகள் இவர்களின் பதிவையும், சலுகையையும் நிராகரித்து முகாமிலிருந்துவெளியேற்றமுயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் அனைவரும் தாயகம் திரும்ப வேண்டியவர்களாக இருந்தாலும் இனக் கலவரத்தில் பாதிக்கப்பட்டு அனைத்தும் இழந்து அகதிகளாக வந்தவர்கள் என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். மற்றும் இவர்களின் உறவினர்களில் ஒரு சிலர் இலங்கையில் குடும்ப அட்டைபெற்று கப்பல்போக்கு வரத்தில்லாத காரணத்தால் தாயகம் திரும்பமுடியாத நிலையில் உள்ளார்கள். இந்த நேரத்தில் இவர்களை முகாமை விட்டு வெளியேற்றுவது நியாயமா ?

ஒரு சிலர் கலவரம் காரணமாக சிதறி தாயகத்திலும் உறவினர்களைக் கண்டு பிடிக்க முடியாத நிலையில் இருக்கிறார் இப்படி அகதிகளாக இருப்பவர்களை தாயகத்தில் குடியேற்றுவதானால் அரசு மறுவாழ்வு உதவிகள் அளிப்பது அவசியமானது.

இலங்கை அரசு இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட இவர்களுக்கு கொடுத்த நிவாரணத்தொகை இந்திய நாணய மதிப்பின்படி 699 ரூபாய் என்பதை கருத்தில் கொள்ளவும், அதிலும் 1984ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வருகைதந்த அகதிகளுக்கு அந்த நிவாரணத் தொகை இன்றும் கிடைக்கப்பெற வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இது சம்பந்தமாக அரசு, தாயகம் திரும்பியோர் நிவாரண நிறுவனங்கள் அக்கறை காட்டி அவர்களின் அல்லல்களை போக்க வேண்டும்.

—நாடக நித்திலம்

# "அகதிகள் திரும்பிச் சென்று சுதந்திரமாக வாழ தேவையான சூழ்நிலைகளை உருவாக்கிடுங்கள்!

## ஒருங்கிணைந்த இலங்கைஅகதிகள் அமைப்பு கோரிக்கை

''அகதிகள் கௌரவத்துடனும், சுய மரியாதையுடனும் திரும்பிச் செல்வதற்கும் திரும்பிச்சென்று சுதந்திரமாக வாழ்வதற்கும் தேவையான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்'' என்று ஒருங்கிணைந்த இலங்கை அகதிகள் மாநாடு வெளியிட்டுள்ள அறிக்கையில் கோரிக்கையிட்டுள்ளது.

இந்திய-இலங்கை அரசுகளிலும் (UNHCR)அகதிகளுக்கான ஐ. நா.வின் 'கமிஷனர் (UNRO) அகதிகள் ஆகியவை உட்பட அகதிகள் பிரச்சினைக்கு தீர்வுகாணவிரும்பும் உலகின் அனைத்து நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும், அரசுகளுக்கும், சர்வதேச அமைப்புகளுக்கும் அந்த கோரிக்கையை விடுத்துள்ளது

அகதிகள் குறித்து பல கோரிக்கைகளை வைத்துள்ளதோடு, மேற்படி கோரிக்கைகள் இலங்கையின் இனப்பிரச்னையை தீர்ப்பதற்கான தீர்மானங்கள் அல்ல ; அவை அகதிகள் திரும்பிச் செல்வதற்கும், சுதந்திரமாக வாழவும் தேவையான சூழ்நிலையை மட்டுமே உருவாக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

ஒருங்கிணைந்த இலங்கை அகதிகள் மாநாடு வெளியிட்டுள்ள கோரிக்கைகள் வருமாறு—

அகதிகள் கௌரவத்துடனும் சுய மரியாதையுடனும் திரும்பிச் செல்வதற்கான சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும் அவ்வாறு திருப்பும்போது மறுவாழ்வுத்திட்டங்கள்மூலம் வீடு தொழில் முதலானவற்றை ஏற்கனவே இருந்த சமூக, பொருளாதார சூழநிலையில் அமைத்துத் தரவேண்டும். தொழில், வியாபார நிலையங்களை இழந்த அகதிகளானவர்களுக்கு மீண்டும் அவற்றை ஆரம்பித்து இடம். நிதிமற்றும் நஷ்டஈடும் வழங்க வேண்டும்.

1983 ஜூலையில் நடந்தது போன்ற இன வெறி சம்பவங்கள் மீண்டும் நடைபெறாதிருக்க அகதிகளுக்கு அரசு உத்தரவாதமும், பாதுகாப்பும் அளிக்கவேண்டும், சிறுபான்மையோர்மீது அடிக்கடி நடத்தப்படும் குண்டர்கள் தாக்குதல்கள் ஒடுக்கப்படுவதோடு சம்பந்தப்பட்டோர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்டுப்பாட்டை மீறி இன வெறிச் செயலில் ஈடுபடும் போலீஸ் இராணுவப் படையைச்சேர்ந்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

கடந்த கால வன் செயல்களின்போது கற்பழிக்கப்பட்ட பெண்களுக்கும் அதன் மூலம் பிறந்த குழந்தைகளுக்கும் அரசு உதவியும், மறுவாழ்வும், அதனால் மனோநிலை பாதிப்புக்குள்ளானவர்களுக்கு தகுந்த பரிகாரமும் வழங்கப்படவேண்டும். இவ்வாறு பிறந்த குழந்தைகளுக்கு சரியான சமூக அந்தஸ்தும் சட்ட அந்தஸ்தும் கொடுக்கப் படவேண்டும்.

இவ்வாறான சம்பவங்கள், அகதிகள் பற்றிய தகவல்கள் தொடுக்கப்பட்டு இதன்மீதான இலங்கைஅரசின் நடவடிக்கை UNRO வின் கட்டுப்பாட்டின் கண்காணிக்கப் படவேண்டும்.

UNRO வின் கண்காணிப்பில் கீழேயே அவர்கள் திருப்பி அனுப்பப்படவேண்டும் என்பதோடு UNHCR இன் அலுவலகம் அகதிகள் திரும்பிச்செல்லும் இடங்களில் அமைக்கப் படவேண்டும்.

நேரு—கொத்தலாவலை சிறிமாவோ சாஸ்திரி 'உடன்படிக்கைக்கு உட்பட்டுள்ள' ஆனல் வன்முறையில் பாதிக்கப்பட்டு வந்துள்ளவர்களுக்கு அவர்கள் இந்தியாவில் தங்க விரும்பும் பட்சத்னில்இந்திய அரசே உரியமுறையில் மறுவாழ்வு வழங்க வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை அகதிகள் **திரும்பிசெல்வதற்கு முன்னே** அகதிகளாகிய நாங்களே நேரடியாக இலங்கை அரசுடன் பேசி உடன் படிக்கைச் செய்வதற்கு வாய்ப்பு தரப்படவேண்டும்—அந்நிய அரசினதும் UNRO விவதும் நேரடிக் கண்காணிப்பின்கீழ் உடன்பாட்டுக்கு வர ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

மேற்கண்ட தீர்வுகளும் சூழ்நிலைகளும் உருவாக்கப்படுவதற்கு முன்னே அகதிகள் எக்காரணம் கொண்டும் பலவந்தமாக திருப்பி அனுப்பக் கூடாது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து ராணுவம் முற்றுகவாபஸ்பெற வேண்டும், பயங்கரவாத தடைச்சட்டம், தேசீய பாதுகாப்புச் சட்டம், அவசரகால சட்டம், பிரிவினைத் தடைச்சட்டம் ஆகிய கறுப்புச்சட்டங்கள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும்.

சிங்களகுண்டர்கள் ராணுவ பயிற்சி; ஒடுக்கப்பட்ட தமிழர்கள் வாழும் பகுதிகளில் குடியமர்த்தும் திட்டம் கைவிடப் படவேண்டும்.

சகல அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டு, வழக்குகள் வாபஸ் பெறப்படவேண்டும். தமிழ் போராளிகள்மீது எவ்வித பழிவாங்கும் நடவடிக்கையும் எடுக்கப்படக்கூடாது.

அரசியல் சாசனத்தில் கொண்டுவரப் பட்டுள்ள ஆருவது திருத்தம் வாபஸ்பெறப் படவேண்டும். வடக்கு.கிழக்கு மக்களின் நாடாளுமன்றபிரதிநிதித்துவம் மீண்டும் வழங்கப் படவேண்டும். அனைத்து மக்களினது எல்லா ஜனநாயக—குடியியல் உரிமைகளும் கொடுக்கப்படவேண்டும்.

கல்வி முறையிலுள்ள இனரீதியான தரப்படுத்துதல், பள்ளிகள் சிங்கள மயப்படுத்தல், பாடத்திட்டங்களிலுள்ள பேரின வாகக் கருத்துக்கள் ஒழிக்கப்படவேண்டும்.

ஜனநாயக உரிமைகளின் அடிப்படையில் சமூக, பொருளாதார மாற்றத்தை கோருவோர்மீது எக்காரணம்கொண்டும் இராணுவமோ வேறு எவ்வித ஆயுதப் படையையோ ஏவப்படக் கூடாது.

இனப் பிரச்னைக்கு எல்லா மக்களும் ஏற்றுக் கொள்ளத் தக்கது சுய நிர்ணய உரிமைகளின் அடிப்படையிலான தீர்வென்று முன்வைக்கப்பட வேண்டும்.

சகலவிதமான இனவாதப் பிர்ச்சாரங்கள் முற்றுக தடை செய்யப்படவேண்டும்,

ஊர்காவல்படை என்றபெயரில் சில பிரிவினரிடம் அளிக்கப்பட்ட ஆயுதங்கள் வாபஸ் வாங்கப்பட்டு அப்படை கலைக்கப்படவேண்டும்.

பொதுமக்கள் குறிப்பாக தமிழ்பேசும் மக்கள் தற்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்,

(8-ம் பக்கம் பார்க்கவும்)

# சமுதாய ஒருங்கிணைப்பு



அமைப்புகளுக்கு இடையின் ஏன் இந்த ஏற்ற தாழ்வுகள், பிரிவினைப் போக்குகள் என்பதை உணர வேண்டும். தனி மனிதன் அல்லது சிறிய எண்ணிக்கை கொண்ட அமைப்புகளின் நோக்கம், பிரிவினை போக்குகள் என்னவென்பதை பார்க்க வேண்டும்.

(1) புரட்சியின் விளைவாகத் தான் மாற்றம் உருவாகும். (2) சாத்வீக முறையில் மாற்றம் உருவாகும். (3) இரண்டும் கலந்த முறையில் மாற்றம் உருவாகும். இப்படி சில சில எண்ணங்கள், இது எந்த முறையில் ஒருங்கிணையப் போகிறது என்ற எண்ணங்கள் சமூக சிந்தனையாளர்களிடம் நிறைந்திருந்தாலும் அவற்றிற்கு தீர்வு காண முடியவில்லை.

இந்த செயலை மனதில் கொண்டு மக்களும், சிலநேரங்களில் எதிர்காலத்தில் முரண்பாடான கருத்துக்கள், அபிப்ராயங்கள் இந்த அமைப்புகளின் மேல் தோன்ற ஏதுவாகின்றன.

தற்போது அரசியல் கட்சித் தலைவர்கள் சிலர் மாறான எண்ணங்களை இந்த அமைப்புகளின் மீது கொண்டுள்ளனர்.

இந்த சிந்தனைகளின் மூலம் தான் இந்த பிரிவினை என்று மட்டும் இல்லாமல் செயல் )வேலை), திறன் (சக்தி), கூட்டுறவு இன்மை, பொருளாதார பேதம் ஆகியவையும் நிலவுகின்றன.

அமைப்புகளின் நிர்வாகிகள் சிலர் அரசியல் கட்சித் தலைவர்களைப் போல எண்ணங்களையும், செயல்களையும் கொண்டுள்ளனர். அவர்களைப் பற்றி அவர்களே பரிபூரணமாக நிலையில் இவ்வாறு உள்ளது.

நிர்வாகம் ஒரு நோக்கிலும் செயலில் இறங்கியுள்ள பணியாளர் வேறு நோக்கத்திலும் மக்களை அணுகுகின்றார்கள். இதனால் மக்களுக்குள்ளே சில குழப்பங்கள் ஏற்பட்டு இவர்களின் சிந்தனையும், நோக்கத்தையும் சந்தேகப் பார்வைக்கு தள்ளுகிறது.

இவ்வாறு மாறுபாடான செயல்கள் ஏற்படும்போது மக்களின் பேச்சுக்கள் அரசியல் கட்சித் தலைவர்களின் கவனத்திற் பாதை சமைக்கிறது. தங்களைத் தாங்கள் நம்புவதில்லை; அதற்காகவே சில எதிர்கால பாதுகாப்புகள் செய்து கொள்கின்றனர். எதிர்காலத்தைப் பற்றி தாங்கள் இவ்வாறு பயந்து செயல்படுபவர்கள் ஒரு பகுதியாகவும்; இத்துறையில் செயல்பட்டாள் சில இன்ப சுபபோகங்களை அனுபவிக்கலாம் என்ற நோக்கிலும் கெடவே கெட்டோம் கிடைத்த வரை அனுபவிப்போம் என்ற நோக்கத்திலும் செயல்படுகிறவர்கள் ஒரு பகுதியாகவும் இரண்டுங்கெட்ட எண்ணமுடையவர்களும் பங்கேற்றுள்ளனர்.

இவற்றையெல்லாம் மனதில் கொண்டு சமுதாய ஒருங்கிணைப்பு பணிகளை செய்ய வேண்டும். அப்போது அது இரும்பு சங்கிலி போன்று பலமாக இருக்கும். மதம் பிடித்த யானையைக் கட்டிப்போட இரும்பு சங்கிலி உபயோகிப்பது வழக்கம். அதை தரமான உலோகத்தைக்கொண்டு உருவாக்கினால் தான் பாதுகாக்ப்பு கிட்டும்.

## இணைப்புகள் ஏற்படுத்துதல்

இந்த ஒருங்கிணைப்புக்கு சமுதாயப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்க வேண்டும். சமுதாயப் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் இரும்பு சங்கிலி உருவாக்கத் தேவைப்படும்உலோகலவை போன்றவர்கள் இவர்களுக்கு அபிப்ராய பேதங்கள் என்ற தாழ்வு, திடமான சிந்தனை, தீர்க்கமான முடிவுஆகியவற்றை தெளிவாக புரியவைக்க வேண்டும்.

இந்த பயிற்சிகளினால் அனுபவ ரீதியான செயல் வடிவத்தில் உள்ள பணியாளருக்கும், பாட முறையில் உணர்ந்து செயல்படும் செயல் வீரர்களுக்கும் கருத்து பரிமாற்றங்களின் உண்மையான நிகழ்ச்சி (பிரச்சனை) இன்னதுதான் என்று அலசிப் பார்க்கும் தன்மையும் உண்டான பிரச்சனைக்கு தீர்வு காண உண்டாகும்வரைமுறை

**சு ஏகாம்பரம்**

இன்னதுதான் சிறந்தது எனவும் தீர்மானிக்க முடியும்.

இதனால் தனிப்பட்ட மனிதன் எல்லாம் தெரிந்தவன் என்ற செருக்கு. ஆணவப் போக்கு முறியடிக்கப்படுகிறது இவற்றையெல்லாம் தனிப்பட்ட குறைபாடாக தவிர்த்து எந்த வழியிலும், அனுபவங்களையும் கேட்டவற்றையும், அறிந்தவற்றையும் கூறுப் போட்டு அலசிப்பார்த்து நாம் அவருக்கு சமம், அவர் நமக்கு சமம் என்ற எண்ணங்கள் அவசியம் முற்போக்கு சிந்தனையாருக்கு தேவைப்படுகிறது.

வாசகர் சிந்திக்கலாம்என்ன இது தலைப்பு ஒன்றாக இருந்தால் வெளிப்படும் கருத்துக்கள் வேறாக புலப்படுகின்றது என்று. ஏன் எனில் ஊருக்கு உபதேசிக்கும் உபதேசகர் முதலில் தான் யார் தனக்குள்ள பங்குதான் பேசும் பேச்சு என்ன, தான் செய்யும் செயல் என்ன என்பதைதானே முதலில் நன்கு உணர்ந்து செயல்பட வேண்டும். இல்லையெனில் எதிர்காலம் இவர்களால் மிரண்டு இருண்ட காலத்துக்கு மீதம் (ஓரளவு விழிப்புணர்வு) உள்ளவர்களையும் தள்ளிவிடும்.

செயல் வீரர்கள் (சமூக பணியாளர்) அவை வகுக்கும் மாநில அளவிலும், தேசீய அளவிலும் உறவுகள் இருக்க வேண்டும். இந்த உறவுகள் இருந்தால் தான் நமக்கு ஒரு மாபெரும் சக்தி இருக்கிறது என்ற தைரியம் ஏற்படும்.

நம் நாட்டில் இப்போது அரசியல் கட்சி அமைப்புகள், அமைப்புகளின் தலைவர்களை அதனைச் சூழ்ந்துள்ள இரண்டாம் தர தலைவர்களும் முன்னேற்றமடையும் சுகபோகங்களை அனுபவிக்கும் நபர்களாக மாறுகின்றனர். இன்னும் சில தொழிற்சங்கத் தலைவர்களிடமும் இதே போக்கு நிலவுகிறது. ஏன் எனில் சில அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர் தான் தொழிலாளர்களின் தலைவர்களாக வருகின்றனர். அப்படி ஓரிருவர் தொழிலாளி வர்க்கத்திலிருந்து தலைவர்களாக வந்தாலும் அவர்களையும் அவர்களின் வலைக்குள் சிக்க வைக்க முயற்சி நடக்கும்.

இதே நிலை சிந்தனைகள், செயல்பாடுகள், வேறு விதத்தில் மாறுபட்ட நிலையில் அமைந்தால் நாம் நினைக்கும் ஒரு சமுதாயம் அமைக்க வாய்ப்பு ஏற்படும். கிராம அளவில் சில அமைப்புகள் இருக்கும். ஆனால் இந்த அமைப்புகளுக்கு போதுமான நிர்வாகத் திறன், செயல்திறன், அரசியல் அறிவு, பொருளாதார நுணுக்கம் சமுதாய சீர்கேடுகள் இவைகள் தெரிய வாய்ப்புகள் இல்லாமல் பொழிவு இல்லாமல் (செயலின்றி) பெயரளவில் அமைப்பாக இருக்கும் ஏதாவது ஒன்றிரண்டு சில காரியங்களில் தெளிவுப் பெற்று இருந்தாலும் அரசியல் அமைப்புகளும், அதிகார வர்க்கங்களும், நீதிகளும் அவற்றைச் செயல்பட விடாமல் தடுக்கும் சூழ் நிலைகள் உருவாகும்.

(8 பக்கம் பார்க்க)

# புதிய தாயகம்

கடல் கடந்து சென்ற தமிழர் மீண்டும் தமிழகம் திரும்புகின்ற பொழுது 'தாயகம்' வருகிறோம் என்ற பூரிப்பில் தான் திரும்புகிறார்கள். பல்லாண்டு காலமாக அந்நிய மண்ணில்வாழ்ந்தாலும், அவர்களின் சந்ததிகள் பிறந்த மண்ணுக்கு உரியவர்கள் ஆனாலும், தமிழகத்தை தாயகமாகவும், தாம் புகுந்த இடத்தை சேயகமாகவும் தமிழர்கள் கருதினார்கள். குறிப்பாக இலங்கையை சேயகம் என்றே தமிழர்கள்என்றும் தமிழர்கள் கருதினார்கள். குறிப்பாக சேயகம் என்றே தமிழர்கள் குறிப்பிட்டு வந்துள்ளார்கள். இந்தியாவிலிருந்து பல நூற்றாண்டுகளாக மக்கள் வெளிநாடுகளில் சென்று குடியேறியுள்ளார்கள். ஏறக்குறைய 15 நாடுகளில் அந்நாட்டு மக்கள் தொகையில் 10 சத விகிதத்திற்கு அதிகமானோராக வாழ்கின்றார்கள். இந்நாடுகள் அனைத்தையுமே சேயகங்கள் எனக் கொள்ளலாம். ஆனால் முழுமையாகவே இந்திய பண்பாடுகள் விரவிய நாடுகளான இலங்கை, மொரிஸியஸ், பீஜீ, கயானா, நேபாளம், சுரிநாம், டிரினிடாட் ஆகியவை உண்மையாகவே சேயகங்கள் தான். ஆனால் சில நாடுகள் அண்மைக் காலத்தில் கடல் கடந்த இந்தியர்களுக்கு பேயகங்களாக மாறிக்கொண்டு வருகின்றன. பிரித்தானியப் பேரரசின் சுவட்டில், அப் பேரரசின் குடை நிழலில் இந்தியர்கள் ஏறக்குறைய ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகளில் குடியேறினார்கள். அந்தந்த நாடுகளின் வளத்திற்கும், வளர்ச்சிக்கும் தமது உழைப்பையும், திறனையும் நல்கினார்கள். ஆனால் காலனித்துவ ஆட்சி முடிவடைந்த பின்னர் அனேகமாக எல்லா நாடுகளிலுமே இந்தியர்களும் அவர்களது சந்ததியினரும் கொடுமைப் படுத்தப் பட்டுள்ளார்கள். உரிமைகள் பறிக்கப் பட்டுள்ளார்கள். தென் ஆபிரிக்கா, பர்மா, உகண்டா, கென்யா, இலங்கை ஆகிய நாடுகளில் இந்தியர்கள் மீது சொல்லொணாக் கொடுமைகள் இழைக்கப்பட்டுள்ளன. அந்நிய ஆட்சியின் கீழ் இந்தியா களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும், இழிவுகளையும் தவிர்க்க முடியாத நிலையில் இருந்ததைப் போல்தான் இந்தியா இன்னுமிருக்கிறது.

இதே நிலையில்தான் ஒரு காலத்தில் சீனா இருந்தது, இதில் சீனா ஒரு ஆசிய வல்லரசாகத் திகழ்கின்ற காரணத்தால், வியட்நாமைத் தவிர மற்றைய நாடுகளில் சீனர்களுக்கு மரியாதை இருக்கிறது. அவர்கள் கௌரவத்தோடு நடத்தப்படுகிறார்கள், இந்தியாவும் இன்று தென் ஆசிய வல்லரசாக விளங்கி வருகிறது, ஆனாலும் தென் ஆசிய நாடுகளில் கூட இந்தியர்களுக்கும் அவர்களது வழிதோன்றல்களுக்கும், இழைக்கப்படும் இன்னல்களைக் களைய முடியாத நாடாக விருக்கிறது இலங்கை போன்ற ஒரு சிறு இந்தியாவை ஒரு கிள்ளுக் கீரையாகவே மதிக்கிறது. இலங்கையில் அந்நியர்கள் மீதும் தமிழர்கள் மீதும் சுமத்தப்படும் அவமானமும் கொடுமையும் சொல்லில் அடங்காது இந்த அவமானத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிற இந்திய நாட்டிற்குதான் புதியதாயகம் நாடி அகதிகள் அணி அணியாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தியா அகதிகளை வரவேற்றுக் கொண்டிருக்கிறதே ஒழிய, இதை நிறுத்தத் தெரியாமல் திகைக்கிறது, அவர்கள் வாழ்வுக்கு வழிவகை செய்யமுடியாமல் தத்தளிக்கிறது. இங்கு வந்து சேர்ந்தவர்களின் அனுபவங்களைத் தொகுத்துப் பார்த்தால் இவர்கள் சரியானஇடத்திற்கு வந்திருக்கிறார்களா என்ற சந்தேகமே எழுகிறது! 5 கோடி தமிழர்கள் வாழுகின்ற தமிழகத்தை தமது தாயகமாகக் கருதித்தான் அல்லலுற்ற தமிழர்கள் இங்கு அபயம் தேடி ஓடி வருகிறார்கள்.

ஆனால் அவர்கள் எதிர் பார்த்ததென்ன? அவர்களுக்கு ஏற்பட்டுள்ளதென்ன?

வருகிற வழியிலேயே, சுங்க அதிகாரிகள் அவர்களைப் படாத பாடு படுத்தி விடுகிறார்கள். அவர்களது உடமைகளைப் பறிமுதல் செய்து எக்கச்சக்கமான சுங்கவரி விதித்தும், ஏளனம் செய்தும், இழிவு படுத்தியும், ஐயகோ! இங்கு ஏன் வந்தோம் என்று அவர்கள் ஏங்குகின்ற நிலைக்குத் தள்ளிவிடுகிறார்கள். எனக்கு ஒன்று தோன்றுகிறது. இந்திய சுங்க அதிகாரிகள் பலரை உலகத்தின் பல நாடுகளுக்கு அனுப்பி பயணிகளைப் பக்குவமாகப் பரிசோதிப்பதைப் பழக்கிக் கொடுக்க வேண்டும்; இராமேஸ்வரம், திருச்சி, சென்னை ஆகிய இறங்கு துறைகளில் பசிவெறி பிடித்த ஓநாய்கள் கொழுத்த ஆடுகளின் மேல் பாய்வது போல் தான் சுங்க அதிகாரிகள் தமிழ்ப் பயணிகளைமீது பாய்கிறார்கள்.

இந்த சுங்கத் தீப்பரீட்சை முடிந்து வெளியே வருபவர்களை, பொதி சுமப்போர்களும் அவர்களது ஏஜண்டுகளும், வாடகை வண்டியோட்டிகளும் வாட்டி வதைத்து விடுகிறார்கள், பிணங்கள் மீது கழுகுகள் கொத்தப் பாய்வது போல் தான் இவர்கள்உளம்நொந்து வரும் அகதிகளிடம் நடந்து கொள்கிறார்கள்,

அடுத்த கட்டம், 'சாமான்கள் வாங்குவோர், சோப்பிருக்கா? குடிவகை இருக்கா? விற்கும் துணியிருக்கா? என்று துளைக்கும் வியாபாரக் கூட்டம் வருகின்ற அகதிகளின் எதிர்பார்ப்புகளை அடியோடு வரண்டுவிடச் செய்கிறார்கள்.
— இதுதான் எங்கள் புதிய சமுதாயத்தின் அறிமுகம்.

பின்னர் படிப்படியாக அரசாங்கத்தின் மறுவாழ்வு உதவிகளைப் பெறுவதில் உள்ள அனர்த்தனங்களும், அவதிகளும் அனந்தம். அரசாங்கம் அகதிகளுக்கு வழங்கும் உதவிகளை புரோக்கர்களின்றி வாங்க முடியாது. இதுபுனர்வாழ்வு அதிகாரிகள் மாமூல், இந்தியா திரும்புவோர்களின் கையாலாகாத்தனமும்வெளிப்படுகிறது.

அடுத்தது அகதிகள் முகாமும் அங்கு ஏற்படும் அவலங்களும் அல்லது கிராமத்திற்கு சென்று அங்கு உறவினர்களாலும் நண்பர்களாலும் உறிஞ்சப்படும் அனுபவம். இத்தனை கசப்பு அனுபவங்களுக்குப் பின்னர்தான் புதிய தாயகத்தின் சுயசொரூபம் தெரிகிறது மூட்டை முடிச்சுகளுடன், சகிதம் கோத்தகிரியிலும்கூனூரிலும் பாதை ஓரங்களில் குடி ஏறி தம் உள்ளக் குமுறல்களை அடக்கிக் கொள்ளும் போது தான் தாயக அனுபவங்களை அறுதியிட்டுக் கொள்ள முடிகிறது.

உலகத்தில் நாடுவிட்டுநாடு பெயரும் துர்ப்பாக்கியத்திற்கு உட்படுத்தப்படுபவர்கள்பலர். ஐரோப்பா செல்கிறார்கள். அமெரிக்கா செல்கிறார்கள். அங்கெல்லாம் ஒருவகை அனுபவம். அமெரிக்காவிற்கு வியட்நாமியர், கொரியர், கியூபாக்கள் என்று பலர் அபயம் நாடி சென்றுள்ளார்கள், அவர்கள் தஞ்சம் புகுந்த நாட்டை புதிய தாயகமாக்கி வாழ்வில்வெற்றி கண்டுள்ளார்கள். அந்நாட்டு மக்கள் தஞ்சம் புகுந்தோரை அன்புடனும். ஆதரவுடனும் அடைக்கலம் கொடுத்து வளர்த்து விடுகிறார்கள்.

இந்தியாவிலோ 'சிலோன் காரர்' என்றும், அகதிகள் என்றும் அவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். அவர்கள் தொழில் புரியும் இடங்களிலும் வாழும் இடங்களிலும் பல கொடுமைகளுக்கு உட்படுத்தப் படுகிறார்கள். அவர்கள் தமிழகம் வந்து பத்து ஆண்டுகளுக்கு மேலான பின்னரும் அகதிகளாய், இலங்கையராய் வாழ வேண்டிய துர்ப்பாக்கியத்தை நோக்கும் பொழுது புதிய தாயகம் அவர்களை

(8-ம் பக்கம் பார்க்க)

**பிறைசூடி**

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊருக்கு உபதேசம் கூறும் சமுதாய மாற்று மையங்க ளுக்கே சில நேரங்களில் தங் களின் செயல் வினையால் சில துன்பங்களில் அகப்பட்டு தவிக்கின்றன, ஏற்பட வாய்ப் புகளும் உள்ளன. ஆனால் மற்ற இயக்கங்கள் அதனை பார்த்துக் கொண்டு தானுண்டு தன் செயல் உண்டு என்ற அளவில் சென்றுக் கொண்டி ருக்கின்றன. இது யாருக்கு பலன், யாருக்கு கடினம் என்று கணக்கு போடாமல் தனிப்பட்ட மனித வாசியைப் போல் தான் காணப்படுகிறது.

சமூக சிந்தனையாஸ் என்ற பெயருக்காவது இதை சிந் தித்துப் பார்க்க வேண்டும். ஏன் இந்த சிந்தனை உருவாக வில்லை என்றால் ஒருவருக்கு ஒருவர் தொடர்பின்மை, நீ வேறு வழி நான் வேறு வழி என்ற பிரிவினை எண்ணங்களே இதற்கு அடிப்படை காரணங் களாக அமைகின்றன— தனக்கு தனக்கு என்றபோக்கு காணப்பட்டால் பிரிவினை சக்தி கள் தான் தலை விரித்தாடும்.

நாட்டில் இயங்கும் ஒவ் வொரு இயக்கமும் ஏன் அரசி யல் அமைப்புகள் கூட நமது நோக்கத்திற்கும் செயலுக்கும் உட்பட்டால் ஒருங்கிணைக்க முயற்சிகள் மேற்கொள்ளலாம் —மேற்கொள்ள வேண்டும்.

# மேற்கொள்ள வேண்டிய கோட்பாடுகள்

(1) (அ) தெளிவான தன் னம்பிக்கை, பரந்த மனப் பான்மை, திடமான சித்தனை தீர்க்கமான முடிவு ஒவ்வொரு அமைப்பின் அங்கத்தினருக் கும் செயல் வீரர்களுக்கும் இருக்க வேண்டும்.

(ஆ) ஐக்கிய உணர்வுகள் ஏற் படுத்தக் கூடியவர்களாக அமையவேண்டும்

(இ) பிரிவினை அபிப்பிராய பேதங்கள் அனைத்தையும் அகற்ற வேண்டும். இவைகள் சீரிய முறையில் இல்லாமல் இருப்பின் நிச்சயம் இது பற்றி கருத்தரங்குகளும் பயிற்சிக ளும் மேற் கொள்ள வேண்டும். இந்த பயிற்சிகளால் முதலில் வலுவடைவதற்கு சில குழுக் கள் ஒருங்கிணைந்து ஆங் காங்கே பயிற்சிகள் நடத்த லாம். இதனால் ஒவ்வொரு அமைப்பும் பங்கேற்க வாய்ப் புண்டு.

2. போதுமான ஏடறிவும், போதுமான செயல்முறை அறி வும் குன்றிக் காணப்படும் இயக்கங்கள் இதனால் முன் னேற் வாய்ப்புகள் ஏற்படும்.

3. பொருளாதார வசதி யுள்ள இயக்கங்கள் வசதியற்ற இயக்கங்களுக்கு கொடுத்து உதவ வேண்டும். (தன்னு டமை போக்கை நீக்க வேண் டும்) இதனால் எல்லா அமைப் புகளும் தரமான செயல் காட் டங்களாக அமையும்.

4) பொதுவாக இந்தக் குழுக்களுக்கு தேசிய அளவில் ஒரு அமைப்பு இருக்க வேண் டும். இந்த அமைப்பில் ஒவ் வொரு இயக்கமும் அங்கத் தினராக இருக்க வேண்டும். இம்மாதிரி அமைப்பு இருந் தால் மாநாடுகள் நடத்த ஏது வாயிருக்கும். எந்த ஒரு சக் தியையும் எதிர்த்து போராட முடியும்.

(5) ஒவ்வொரு கிராமத்தி லும் அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும். அந்த அமைப்பு களில் கட்டாயம் போதனை வகுப்புகளின் மூலம், அரசி யல், பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், நீதி இவற்றைப் பற்றி தெளிவான கருத்தரங்கு கள் நடத்த வேண்டும். மாநா டாகவும் நடத்த வேண்டும்.

★ பொதுவாக சமுதாய வளர்ச்சி மையங்களைப்பற்றிய தாகவும் மக்களின் நல்வாழ்வு கருத்துக்கள் பற்றியதாகவும் வெளியிடும்பத்திரிகை தேவை படும்.

★ இவ்வாருக இந்த அமைப்புகளை இணைத்துவிட வேண்டும். இவ்வாறு இணைத் துவிட்டால் மதயானைபோன்று மக்களை சீரழிக்க முனைகிறவர் களையும், மக்களின் வாழ்வும் மாற்றமடைய வாய்ப்புகள் ஏற்படும்.

''இந்திய நாட்டில் சமுதாய மாற்றத்துக்குள்ள பிரச்சனை கள்'' என்ற இதழிலிருந்து.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

தாய் போல் அரவணைத்து ஏற் றுக் கொள்ளவில்லை என்பது புலருகிறது. வேண்டாத விரு ந்தாளிகள் போல் அவர்கள் ஒதுக்கப் பட்டிருக்கிருர்கள். அவர்களுக்குக் கட்டப்பட்ட வீடுகளுக்குக் கூரையில்லை. அவர்களுக்குக் கொடுக்கப் பட்ட நிலங்களுக்கு நீரில்லை. அவர்கள் வாழுகின்ற குடிசை களுக்கு உத்தரவாதமில்லை. அவர்கள் செய்கின்ற தொழி லுக்கு ஏற்ற வருமானமில்லை, கேத்தி கிராமத்தில் அவர்கள் வீடுகளும், உடைமைகளும் உடைத்தெறியப் பட்டிருக்கின் றன. சில இடங்களில் கொலை கள் கூட நடந்திருக்கின்றன.

அவர்களது மறு வாழ்வும் இலங்கை வாழ்வைப் போலவே கண்ணீர் நிறைந்த தாக, கவலை நிறைந்ததாக, வேதனை நிறைந்ததாகவே அமைந்துள்ளது.

இவர்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுத்துவதற்காக பல இயக்கங்கள் இருக்கின் றன. பல ஆர்வமுள்ளவர் பற் பல இடங்களில் பயனுள்ள பணிகள் செய்து வருகிருர்கள். எனினும் பெரும்மாலான மக் கிள் வாழ்வு இருண்டதாக, நம்பிக்கை அற்றதாகவே அமைந்துள்ளது. மறுவாழ் வுத் திட்டங்களில் பெரும் பாலாவை தோல்வியுற்றுள் ளன, பல திட்டங்கள் உருப் பெறவே இல்லை.

ஆகவே புகுந்த நாடு புதிய தாயகமாக இருக்க வேண்டு மானல் தமிழ் நாட்டுத் தலை வர்களும், நிர்வாகப் பொறுப் பினர்களும் மறுவாழ்வு நாடு வோர்களை நொந்த மக்களாக புனர்வாழ்வில் முறையாக அமர்த்தப்பட வேண்டிய மக் களாக, தமது சகோதரர்க கருதி கடமை செய்ய வேண் டும். நீலிக் கண்ணீர் வடித் துப் பயனில்லை. கிரேக்கத் திற்கு செல்லும் கிரேக்கக் குடி மகன் தனது தாயகம் அடைந் தோமென்று அகமகிழ்கிருன். அமெரிக்கா செல்லும் அகதி கள் சொர்க்க பூமிக்கு வந்து விட்டோமென்று மகிழ்கிருர் கள். இங்கிலாந்துக்குச் செல் லும் ஆங்கிலேயன் இறுமாப் படைகிருன். தமிழகத்திற்கு வருகின்ற தமிழர்கள் அழுது கொண்டே இருக்க வேண் டுமா?

## சலுகைகளில்லை

அகதிகள் தங்கி இருக்கும் முகாம்களில் அகதிகளுக்கு வழங்கிம் சலுகைகளை அநி யாயமாக வெட்டி விடுகிருர் கள். பிள்ளைகளை பள்ளிக் கூடத்தில் சேர்த்தால் சலுகை வெட்டு; ஆஸ்பத்திரிக்கு போனாலும் சலுகை வெட்டு.

திருச்சி முகாம் உள்ள ஒரு அகதி தன் பிள்ளையை மாத் தூர் தாயகம் திரும்பியோர் பள்ளியில் சேர்த்ததால் இந்த சலுகை வெட்டப்பட்டது தெரி விக்கப்படுகிறது. படித்தாலும் படித்து விட்டு முகாமில்தான் இருக்க வேண்டும் என்று முகாம் அதிகாரிகள் தெரிவிக் கிருர்களாம்.

மற்றொரு அகதி தன் பிள் ளையை சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்ப்பித் ததால் அந்த பிள்ளைக்கு சலுகை மறுக்கப்பட்டதாம். நோயாளியை பார்த்து ஓராண்டு ஆஸ்பத்திரியில் தங்கி விடுகிறவர்களுக்கு சலுகைகள் மறுக்கப்படுகிற தாம்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இன அடிப்படையில்அமைக் கப்பட்டுள்ள ராணுவப்பிரிவு கள் அனைத்தும் கலைக்கப்பட்டு சிறுபான்மை 'இனத்தவர்களை யும் உள்ளடக்கிய தேசீய ராணுவம் உருவாக்கப் பட வேண்டும்,

சிறுபான்மை இனத்தவர் கள் இன ஒதுக்கீடு உட்பட் டுள்ள பிரச்சனையை தீர்ப்ப தற்கு முதலில் இலங்கை அரசு மக்களுக்கு முழுமையான ஜன நாயக உரிமைகளை கொடுத்து அரசியல் ரீதியில்இயங்குவதற கான வாய்ப்புகளை அளிக்க வேண்டும்.

சிங்கள பௌத்த பேரின வாதத்தை சிறுபான்மையினத் தவர்களுக்கு எதிராகப் பயன் படுத்தும் சக்திகளை இனங் கண்டு அவற்றை ஒடுக்குவ வதன் மூலம் சுமூகமான சூழ் நிலை தோன்றுவதற்கு இலங் கை அரசு உதவவேண்டும்.

இந்த சூழ்நிலை உருவாகி சிறுபான்மைமக்களின் பிரச்சு னைகளை எல்லா இலங்கை மக்க ளின் மத்தியிலும் கொண்டு செல்வதன்மூலமே பூரணமுடி வொன்றை காணமுடியும் என் றும் அவ்வறிக்கை குறிப்பிட் டுள்ளது.

# தாயகம் திரும்பியோர் மற்றும் அகதிகள் என்போர் யார் ?

○ தாயகம் திரும்பியோர் மற்றும் இலங்கை அகதிகள் பற்றிய கருத்துக்களில் பெருவாரியான மக்களிடத்தில் ஒரு வகை குழப்பம் நிலவுகிறது. இனவெறி சிங்கள அரசின் அடக்கு முறையில் இரு சாராரும் பாதிக்கப் பட்டவர்களே. ஆனல் அவர்களுக்கு இந்தியாவில் அளிக்கப்பட வேண்டிய உதவி மற்றும் மறுவாழ்வு பணி களை பொறுத்த வரை நிறைய வேறுபாடுகள் உள்ளன. அரசு நிர்வாக குழப்பங்களை தவிர்க்க அகதிகள் மற்றும் தாயகம் திரும்பியோர் இடையே உள்ள வேறுபாடுகளை பற்றி ஓர் தெளிவான கருத்து உருவாதல் மிக அவசியம் அதைக் கருத்தில் கொண்டு இரு பிரிவினர்களுள்ள வேறுபாடுகள் கீழே தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது.

## தாயகம் திரும்பியோர்

★ இவர்கள் இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் 1969-ம் ஆண்டிலிருந்து இந்தியாவுக்கு இடம் பெயர்ந்து குடியேற தொடங்கியவர்கள். இவர்கள் அனைவரும் இந்தியாவில் குடியுரிமை அளிக்கப்பட்ட இந்திய வம்சாவழி தமிழர்கள்.

★ இவர்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளப்படி 6லட் சம் பேர்கள் ஆவர். மொத்த மக்களும் குடி பெயர வில்லை.

★ இவர்கள் இந்தியாவில் தங்க உரிமை பெற்றவர்கள். இந்திய மக்களுடன் கலந்து வாழ வேண்டியவர்கள். சுமார் 98 விழுக்காடு தோட்ட தொழிலாளர்கள்.

★ தோட்ட தொழிலை தவிர மற்றெந்த வேலையும் அறி யாதவர்கள். போதிய கல்வி பெறாதவர்கள்.

★ பெரும்பான்மையானோருக்கு மலை பிரதேசங்களில் மறு வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. மிகவும் அறிய நிலையிலுள் ளவர்கள் பல்லாண்டுகளாக கூலியுழைப்பை தவிர வேறு அறியாதவர். மற்றவரை சார்ந்திருக்க வேண்டிய கட் டாயத்திற்குட்பட்டவர்கள்.

★ இவர்களை பொறுத்தவரை கல்வி,சமூகம் மற்றும் பொரு ளாதார துறைகளில் முழு மறுவாழ்வு அளிக்கப்பட்டு இந்திய மக்களோடு கலந்து வாழ வகை செய்யப்பட வேண்டியவர்கள்.

★ நில பிரபுத்துவத்தை சார்ந்திருக்கக்கூடிய நிலையிலி ருந்து விடுப்பட்டு சுயமாக வாழ இவர்களுக்கு முறை சாரா கல்வி மற்றும் அனைத்து வசதிகளும் அளிக்கப்பட வேண்டியவர்கள்.

## அகதிகள்

★ இவர்கள் 1980 மற்றும் 1983-ல் நடந்த இனக் கலவ ரங்களுக்குப் பின் இந்தியாவில் தஞ்சம் புகுந்தவர்கள் இவர்கள் எல்லோரும் இலங்கை குடியுரிமை பெற்ற வர்கள்.

★ இந்தியாவில் சுமார் 1 லட்சம் அகதிகள் (இலங்கை) தஞ்சம் புகுந்துள்ளனர்.

★ இவர்கள் தற்காலிக விருந்தினர்களே. இலங்கை பிரச் சினைக்கு ஓர் தீர்வு ஏற்பட்டவுடன் இலங்கைக்கு உரிய மரியாதைகளோடு திரும்பி அங்கு மறுவாழ்வு பெற வேண்டியவர்கள். பெரும்பாலோர் நகரத்தில் தொழில் புரிபவர்கள்.

★ பல தொழில்களிலும் தேர்ச்சி பெற்றவர்கள். கல்வி கற்றவர்கள்.

★ நகரங்களில் தஞ்சம் புகுந்துள்ளவர்கள், பெரும்பான்மை யோர் வசதியானவர்கள். கல்வி மற்றும் இருப்பிட வச திகளில் மட்டும் சலுகை தேவையுள்ளவர்கள். யாரை யும் சார்ந்திருக்க அவசியம் இல்லாதோர்.

★ இவர்கள் தற்காலிக உதவி தேவையுள்ளவர்கள். அரசி யல் தஞ்சம் புகுந்தவர்கள்.

★ இலங்கையிலிருந்து இவர்களில தமிழ் தாயகத்தை விடு விப்பதே இவர்களின் குறிக்கோள். ○

## நிர்வாகஇயக்குனருக்கு பிரியாவிடை

### தாயகம் திரும்பியோர் வங்கி டெலிகேட்டுகளுக்கு டெலிகேட் யூனியன் தலைவர் வேண்டுகோள்

அன்புடையீர்!

வணக்கம். கடந்த மூன்றாண்டு காலமாக எமது தாய கம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் நிர்வாக இயக்குன ராக இருந்து வங்கியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு பல முன்னேற்றங்களை கண்டதோடு மேற்படி வங்கியின் மூலம் வேலை வாய்ப்பு பெற்ற தாயகம் திரும்பியோர்களின் பிரச்சனைகளை உணர்ந்து அவ்வப்போது உரிய நடவ டிக்கை எடுத்து அவர்களது நலனில் அக்கறை கொண்டு பல நல்ல பணிகளை செய்து வந்த திரு சுந்தரராஜ் இ.ஆ.ப அவர்கள் இடமாற்றம் பெற்று வேறு பணிக்கு சென்ற தால் அவர்களுக்கு பிரிவுபசாரமொன்றை அளிக்க முடிவு செய்துள்ளோம்.

அவ்விழாவில் அவருக்கு பாராட்டுகள் வழங்குவதோடு அன்பளிப்புகள் வழங்கவும் தீர்மானித்துள்ளபடியால், அனைத்து டெலிகேட்டுகளும் கலந்துகொள்ள வேண்டுமென விரும்புகிறோம்.

தமிழ் நாட்டின் பிற பகுதிகளிலுள்ளவர்களில் வர பல ருக்கு வாய்ப்பு இல்லாவிட்டாலும், சென்னை செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள டெலிகேட்டுகள் தவறாது கலந்து கொள்ளவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

மேற்படி பிரிவுபசார விழாவுக்கு வருகை தர இருக்கும் டெலிகேட்கள் எமக்கு அறிவிக்கும்படி வேண்டுகிறோம்.

ஆ. வீ. உதயணன்
தலைவர்,
தாயகம் திரும்பியோர்
வங்கி டெலிகேட் யூனியன்
29, E. H, ரோடு, சென்னை-39.

# தாய் மொழி தமிழை பயில வாய்ப்பில்லை!

தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு அடிப்படையில் கர்நாடகத்தில் தென் கன்னடம் மாவட்டத்தில், சுள்ளியா, புத்தூர் இரு வட்டங்களில் சுமார் முப்பத்தைந்தாயிரம் (35,000) ஏக்கர் நிலத்தை இரப்பர் தோட்டங்களாக பயிர் செய்து ஏறத்தாழ 2000 குடும்பங்கள் 1970 யில் முதல் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

குடும்பத்தில் இருவருக்கு மட்டுமே வேலைவாய்ப்பு என்ற அடிப்படையில் சுமார் 4000 தொழிலாளர்கள் தொழிற் செய்து வருகின்றனர்.

சிறந்த குடியிருப்பு, குடி நீர் வசதி சில இளங்களில் மின் சார வசதி, தொழிற் சட்டப் படி தொழிலாளர்களுக்கு பல சலுகை, குழந்தைகளுக்கு பால்மா, காப்பகம் பாடசாலை

## ஆர் கே வேணி

இப்படி பல சலுகைகளுடன் பல தாயகம் தொழிலாளர்கள் நிம்மதியாக கர்நாடகா அரசு வழிவகைகளை செய்துள்ளதையிட்டு நன்றிக்கடன் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

தொழிலாளர்களின் குழந்தைகள் இங்குள்ள பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர், முதலாம் வகுப்பிலிருந்தே கன்னடத்தை பிரதான மொழியாக பயின்று இன்று அதே மொழியில் பட்டப்படிப்பும் படித்து வருகின்றனர். இது பெருமைப்படக்கூடிய ஒன்றே. தன் தாய் மொழியை மறந்து அன்னிய மொழியில் திறம்பட கல்வி கற்பதினால் ஏற்படும் சுமைகள் பல உண்டு என்பது வெட்ட வெளிச்சமாக தெரிகிறது. கன்னட மொழியை பயில்வது இங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்றதே கர்நாடகத்தில் கன்னட மொழியில் கல்வி கற்றவர்களுக்கே அரசு தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. கர்நாடக அரசால் இது வரை சுமார் 10 பேர் தமிழ் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு பள்ளியிலும் ஏறத்தாழ ஐம்பது தமிழ் மாணவர்கள் கன்னடம் பயில்கின்றனர். இவர்களுக்கு தாய்மொழியைக் கற்றுக்கொள்ள ஒரு அரிய வாய்ப்பினை கர்நாடக அரசு அளித்துள்ளது. ஆனால் தமிழ் பாடசாலைகளில் கற்பிப்பது கிடையாது. குழந்தைகளுக்கு தமிழில் எழுதவோ, வாசிக்கவோ தெரியாது. எழுபத்தைந்து சதவீத மாணவர்களுக்கு தமிழே தெரியாது. வீட்டில் பெற்றோர் சுற்றார்களிடம் 'கன்னடத்திலேயே உரையாடுவது வழக்கமாகிவிட்டது இன்னும் சில வருடங்களில் தமிழே மறைந்துவிடும் அளவிற்கு இங்குள்ள சூழ்நிலைகள் புலப்படுத்துகின்றன.

தமிழ் ஆசிரியர்களிடம் இது பற்றி கேட்டால், எங்களை ஆசிரியர்களாக நியமனம் செய்து ஊதியம் கொடுக்கிறார்களே தவிர கல்வி இலாகாவினால் இதுவரை தமிழ் பாடநூல்கள் கடைகளிலும் கிடையாது. பள்ளிகளில் தமிழ் மாணவர்களுக்கு நமிழ் ஒரு உபரி பாடமாக நடத்தக்கூட நேரஅட்டவணை ஒதுக்கப்படவில்லை. மதிப்பெண்கள் பதிவேடு கிடையாது, தேர்வுகள் இல்லை. கல்வி இலாகாவிடம் இதுபற்றி முறையிட்டால் செவிடன் காதில் சங்கு ஊதுவது போலாகி விடுகிறது என்று அடுக்கிக் கொண்டே போகிறார்கள்.

தமிழையே வேண்டாம் என்று கூட பெற்றோர்கள்பலர் தங்களிடம் கூறுவதாகவும், தமிழ்க் கற்றுத்தர வேண்டாம் கன்னடம் பயின்றால் போதுமானது என்று பல பெற்றோர்கள் எழுத்து மூலமும் கூறியுள்ளதாக ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

இந்த சூழ்நிலையைப் பார்க்கும்போது தமிழ்மொழி இங்கு ஏற்படுகிறது என்று கூறினாலும் மிகையாகாது. ''தமிழன் என்று சொல்லடா; தலை நிமிர்ந்து நில்லடா'' என்ற வார்த்தை இங்கு பொய்யாகும் நிலை உருவாகியுள்ளது.

இது பற்றி இங்குள்ள தமிழ் சங்கம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. பல முறை இதுபற்றி அறிவித்தும் மொழி வளர்ச்சியினைப் பற்றி எவரும் சிந்திப்பாரில்லையே என்னும் போது பெரும் வேதனையாக இருக்கிறது.

இங்குள்ள நான்கு பிரதான தொழிற்சங்கங்களுக்கு இது பற்றி கூறியும்கூட கேட்பாரில்லை, தொழிலாளர்களின் குறைபாடுகளை தீர்த்து வைக்கும் தொழிற்சங்கங்கள் இதையும் ஒரு தொழிலாளியின்பிரச்சனையாக எடுத்துக் கொள்ளக் கூடாதா? ஏன் தமிழன் என்று கூறிக்கொள்ள வெட்கமோ என்றுதான் எண்ணத்தோன்றுகின்றது.

## சென்ற விடமெல்லாம்

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

அகதிகள் வருகையே தாயகம் திரும்பியோர் உதவிகள் குறைய சலுகைகள், முன்னுரிமை இழக்க காரணமா? என்று பாதிக்கப்பட்டவர்கள் கேட்கின்றனர்.

மறுவாழ்வு உதவிகள் நிவாரண உதவிகள் அளிக்கும் அதிகாரிகள்தாயகம் திரும்பியோர் அகதிகள் ஆகிய இரு சாரார் பிரச்சனைகளையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்'

இரு சாராரும் எல்லாம் இழந்து வருகிறவர்கள் தான்' தாயகம் திரும்பியோர் உயிர் வாழ்ந்து இங்கு தமது வாழ்க்கைஅமைத்துக்கொள்ள வேண்டும். அகதிகளோ இங்கிருந்து அந்த நாட்டிற்குச் செல்லும் வரை உயிர்வாழ வேண்டும், ஆக இரு பகுதியினரும் உயிர்வாழ உரிய உதவிகள் பேதமின்றி அளிக்க வேண்டும்.

அதே வேலையில் தாயகம் திரும்பியோர் இந்த நாட்டின் வம்சாவழியினர், வாழும் உரிமை பெற்றவர்கள் அவர்கள் உரியதை பெற்றுக் கொள்ள உரிமையுள்ளவர்கள்.

இலங்கை தமிழர்களுக்காக அடையாள வேலை நிறுத்தம், நிதி, நன்கொடை, கண்டனக் கூட்டங்களும் நடத்தும் இவர்களும் தமிழர்கள் தானே? இங்கு தமிழ்மொழி மெல்ல மெல்ல தேய்ந்து இறந்து கொண்டிருக்கும் அவல நிலை கண்டு ஏன் கவனம் எடுக்கக் கூடாது?

தொழிற்சங்கங்கள் தங்களுக்கிடையே போட்டிப்போட்டுக் கொண்டு உறுப்பினர்களை பெருக்கும் பணியிலேயே காலம் கடத்துவதையிட்டு தமிழ் மொழியையும் வளர்க்க ஆவன செய்தால் அதுவே தமிழுக்காற்றும் தொண்டுகளில் சாலச் சிறந்தது என்றால்மிகையாகாது.

கர்நாடகம் என்றால் என்ன? காஷ்மீர் என்றால் என்ன தமிழன் என்றும் தமிழன்! தமது தாய் மொழி என்றும் தமிழே! தமிழ் வளர்ச்சிப் பணியைத் தொடங்கி தமிழரின் தாய் மொழியைக் காப்பது ஒவ்வொருவரினதும் தலையாயக் கடமையல்லவா? ○

# வேலை வாய்ப்பு தகவல் ஒன்று

தமிழ்நாடு சிங்கோனா பணியில் இரு தோட்டக் கண்காணிப்பாளர் (Superintendent Plantations) பதவிகளில் நேரடியாக நியமனம் மூலம் நியமிக்கப்பட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இது சம்பந்தப்பட்ட விளம்பரம் ஒன்றை TNPSC (விளம்பர எண்: 37) பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளது.

தாயகம் திரும்பியோர்களில் தகுதி வாய்ந்தவர்கள் தெரிந்துகொள்ள விளம்பரத்தை இங்கு பிரசுரிக்கிறோம்—

தமிழ்நாடு சிங்கோனா பணியில் இரு தோட்டக் கண்காணிப்பாளர் (Superindent Plantations) பதவிகளில் நேரடி நியமனம் மூலம் நியமிக்கப்பட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. (ஒதுக்கீடு எந்தப் பிரிவுக்கும் கிடையாது).

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூபாய்1,340-75, 1,715-90 2,436 (புதிய விகிதம்) வயது 30க்கு குறைவாக தகுதி பி. எஸ்.சி. (வேளாண்மை)யில் இரண்டாம் வகுப்பு பட்டம் அல்லது தாவரவியலை முதன்மை பாடமாக கொண்டு பி.ஏ. அல்லது பி.எஸ்.சியில் முதல் வகுப்பு பட்டம் மற்றும் (ii) சிங்கோனு, நறுமண தாவரங்கள் தேயிலை,ரப்பர், காபி முதலிய மலைத்தோட்டப் பயிர்களை பெரிய அளவில் பயிர்செய்வதில் இரண்டாண்டுகளுக்கு குறையாத அனுபவம்.

முடிவு தேதி : 9—9—85 மாலை 5-30 மணி வயது வரம்பு 1—7—85 அன்றுள்ளபடி

ஆதி திராவிடர் வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் தாயகம் திரும்பியவர்கள்' முன்னுள் இராணுவத்தினர் நாற்பது எயதுக்கு குறைவாக உள்ள விடுவிக்கப்பட்ட மற்றும் பணிபுரியும் தற்காலிக மாநில அரசு பணியாளர் போன்றவர்களுக்கு வயது மற்றும் அல்லது கல்வித் தகுதிகளிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில் அறிவிக்கையில் தரப்பட்டுள்ளன.

விண்ணப்ப படிவமும் நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்துமூலம் விண்ணபித்து பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பம் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டுஎழுதப்பட்டு செயலாளர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1—8—85 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட இரண்டு ரூபாய்க்கான கோடிட்ட அஞ்சல் ஆணையுடனும் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26X12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும், மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டா.

Editor & Publisher : T. S. RAJU, Gangaiamman kovil Street, Madras- 600 094. Printed: L. S. Srinivasan Jai Kalidas Press, 29, B.E. Colody, 4th Street, Madras-24
Published in Collaboration with the ISLAND TRUST,

(முதல் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியா திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகள் நடந்து முடிந்தவுடன் மீதியுள்ள 94 ஆயிரம் பேருக்கு குடியுரிமை வழங்கப்படும் என்று கூறியுள்ளார்,

அதே வேளையில், இந்திய தமிழர்கள் (மலையகத் தமிழர்) சார்பான பிரதிநிதிகள்கலந்து கொள்ளாத வரை இந்தியத் தமிழர் பிரச்சனை பற்றி பேச உரிமை இல்லை என்று இலங்கைக் குழு மறுத்து விட்டது.

''குறிப்பிட்ட ஒரே சமூகத்திற்கு மட்டும் விசேஷ சலுகைகளைஅளிப்பதில்எந்தவித மான அரசியல் தீர்வையும் காண முடியாது. நாட்டில் தமிழ் பேசும் மக்களின் சார்பில் வாதிடும் உரிமையை இந்த குழுக்களுக்கு மட்டும் அளித்து விட முடியாது; ஏனெனில்முஸ்லிம்கள், இந்தியத் தமிழர்கள் போன்ற பிரிவினரும் இருக்கிருர்கள்'' என்று ஹெக்டர் ஜயவர்த்தனு குறிப்பிட்டிருககிருர். தற்போதைய பிரச்சனைக்குத் தீர்வு காணும்போதுதங்களுடைய பிரச்சனைகளையும்பரிசீலிக்க வேண்டும் என முஸ்லிம் மக்கள் அறிவித்தனர். ஒரு முஸ்லிம் தூதுக் குழுவும் தமிழகம் வந்து தமிழ் விடுதலைக்குழுக்களை சந்தித்துச் சென்றது,இதைத் தொடர்ந்து இலங்கை அரசு தரப்பிலும் தமிழர் குழுக்கள் தரப்பிலும் புதிதாக தமிழ் முஸ்லிம்கள் இடம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இப்பேச்சு வார்த்தையில் உரிய தீர்வு தோன்ருது சூழ்நிலைகளில் பின்னடைவு (இது பிரசுரமாகும்வரை) ஏற்பட்டுள்ளது,

இதைத் தொடர்ந்து இந்திய அரசு எடுத்துள்ள முயற்சியில், கடந்த நவம்பர் மாதம் கொழும்பு அனைத்து கட்சி மாநாட்டில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கூறிய யோசனைகளை திம்பு பேச்சு வார்த்தைகள் பரிசீலிக்க இலங்கை அரசு முன் வந்துள்ளதாகவும் செய்திகள்கூறுகின்றன.

இலங்கை அரசு தற்போது பரிசீலிக்க முன் வந்துள்ளதாகக் கூறப்படும் இ,தொ, காங்கிரஸ் யோசனைகளை இலங்கை கிராமப்புற தொழில் வளர்ச்சித்துறை அமைச்சர் தொண்டமான் முன்பு சர்வகட்சி மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

தமிழர்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய ஒரு பிராந்தியமும், இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களுக்கு மத்திய மலைப்பகுதியில் ஒருதனிப் பிராந்தியமும் அளிக்கப்பட வேண்டும். இந்த மொழி வழி பிராந்தியங்கள் மாகாண கவுன்சில் என்றுஅழைக்கப்பட வேண்டும், அவற்றுக்கு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் (போலீஸ்) அதிகாரம் இருக்கும் என்பவை அந்த தீர்மானம்.

ஈழ விடுதலை அமைப்புகள் மேற்படி தமது கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்றன

''பேச்சு வார்த்தைகள்மூலம் இந்த பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இந்திய அரசு மேற்கொள்ளுகிற முயற்சிகளை ஈழத் தமிழ் இளைஞர்களின் தீவிரவாத அமைப்புகள் எதிர்க்கவில்லை'' என்றும் தெரிவித்துள்ளதோடு, இலங்கை அரசு தட்டிக்கேட்க இந்திய அரசு தவறுமேயாளுல் ஈழ தீவிரவாதிகள் தற்காப்பு நடவடிக்கையில் இறங்குவார்கள். இதைத் தவிர வேறு இல்லை'' என்று திம்பு பேச்சு வார்த்தை நடக்கும்போதே இலங்கை ராணுவம் நடத்தும் படுகொலைகளையும் கண்டித்துள்ளனர். ○

(12ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்திற்கு அரசியல் பிரமுகர்களிம், அரசு அதிகாரிக்ளும் காரணம் என்று சொல்லப்படுகிறது.

தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு அரசு பல உதவிகளையும், சலுகைகளையும் அளித்தாலும் அவர்கள் கொடுமைகளுக்கும் ஆளாகி வருகிருர்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிரேம். ○

Regd. No. R. N. 42556/83 Regd. No. TN/MS(C) 702 MAKKAL MARUVAZHVOO

தாயகம் திரும்பியோரின்
வழிகாட்டி

# மக்கள் மறு வாழ்வு

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
1. தெற்கு கங்கையம்மன் கோயில் 2வது தெரு
சென்னை—600 094.

### மந்திரி அவர்கள் பட்டா கொடுக்க மக்களோ விரட்டுகிறார்கள்

# இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களை இடுகாட்டில் கூட வாழவிடாது விரட்டும் கொடுமை

மந்திரி பட்டா வழங்கிய நிலத்தில் வாழ்ந்த தாயகம் திரும்பியோர்களின் குடியிருப்புகளை உடைத்து தரை மட்டமாக்கியதோடு அவர்களது உடமைகளையும் சூறையாடிச் சென்றனர் உள்ளூர்வாசிகள். இந்த கொடுமை தமிழ் நாட்டில், நீலகிரி மாவட்டத்தில் நடந்துள்ளது.

நீலகிரி மாவட்டம் குன்னூர் வட்டத்திலுள்ள கேத்தி கிராமத்தில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 60 அரிசன குடும்பங்கள்குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு 10—9—84 அன்று மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களால், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு, என்.பி- குப்தா அவர்கள் முன்னிலையில் கேத்தி கிராமத்தில் வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டது.

சட்டப்படியும், நீதிப்படியும் வழங்கப்பட்ட வீட்டு மனை பட்டா நிலத்தில் மேற்படி தாயகம் திரும்பிய 60 குடும்பங்களும் வீடு கட்டி குடியிருந்து வந்தனர்.

கடந்த 21—7—85 அன்று இனவாதத்தைக் கிளப்பும் சில சமூகவிரோதிகள் இவர்கள்கட்டிக் குடியிருந்து வந்த 60 வீடுகளை உடைத்து தரை மட்டமாக்கியதோடு இவர்களைவைத்திருந்த பொருட்களையும் சூறையாடி சென்றுள்ளனர்.

இது தொடர்பாக சட்டம், ஒழுங்கை பாதுகாக்கும் காவலர்க்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் புகார் செய்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை; நீதியும்கிடைக்கவில்லை

இப்பிரச்சனைக் குறித்து நடவடிக்கை எடுத்து வரும் தாயகம் திரும்பியோர் ஐக்கியமுன்னணி சம்மேளனத்தின் நீலகிரி மாவட்டத்தின் கிளைகளின் பொருப்பாளர் திரு. எம். பி, துரை குறிப்பிடுகிறார்,

''இந்த அறுபது குடும்பங்களும் சட்டப்படி தான் இந்த இடத்தில் குடியேறியுள்ளனர், இவர்களுக்கு அமைச்சர் அவர்கள் மூலமாகவே வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டுள்ளது.

''தமது பட்டாவில் இவர்கள் கட்டியிருந்த குடியிருப்புகளை உள்ளூரைச் சேர்ந்தசமூக விரோதிகள் உடைத்து தரை மட்டமாக்கியுள்ளனர். இவர்கள் இங்கு குடியேறுவதை ஆட்சேபிப்பது என்றால் முறைபடி—சட்டப்படி செய்திருக்க வேண்டும், அதற்குத் துணிவில்லாதவர்கள் இந்த அப்பாவி தாயகம் திரும்பியோர்களில் வீடுகளை உடைத்து, பொருட்களை சூறையாடிக் களைத்திருக்கிறார்கள்.

''சட்டவிதிப்படி பார்க்கப் போனால் பட்டா வழங்கும் தினத்திற்கு 15 நாட்களுக்கு முன் சம்பந்தப்பட்ட ஊரில் தண்டோரா போடப்படும் பட்டா வழங்கி 15 நாட்களுக்குப் பின்பே நிலம் பிரித்துக் கொடுக்கப்படும்'''

''இந்த சட்ட விதிகளுக்குட பட்டே இந்த வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டிருக்க வேண்டும்.''

''அமைச்சர் அவர்கள் இவர்களுக்கு குன்னூரில் பட்டா வழங்கியபோது 'இந்த பட்டாவழங்குவதில் ஏதும் ஆட்சேபனை இருக்கிறதா!' என்று கேட்டார் அப்போது எந்த எதிர்ப்பும் — ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை; அமைச்சர் பட்டா வழங்கிய அந்தக் கூட்டத்தில் சுமார் 5000 பேர் கூடி இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

''ஆனால் இதுவரை இந்த பட்டா மனையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பிரித்துக் கொடுக்காமல் காலம் கடத்தி வருகிறார்கள் என்பது கவனத்திற்குரியது.

''சுமார் 500 பேருக்கு மேல் பட்டவர் கூடி செய்துள்ள இச் சமூக சட்ட விரோத நடவடிக்கைக் குறித்து இதுவரை சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய போலீஸாரோ, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ நடவடிக்கையே எடுக்கவில்லை'' என்று தெரிவிக்கிறார்.

''முதலில் இந்த இடம்பள்ளி ஆசிரியருக்கு ஒதுக்கப்பட்டது அவர்கள் தண்ணீர் வசதியில்லை என்று வேண்டாமென மறுத்து விட்டனர். பிறகு தற்போது நேர்கொம்பை என்ற இடத்தில் வாழும் தாயகம் திரும்பியோர் 30 குடும்பங்கள் வழங்க முனைந்தபோது அவர்களும் அங்கு போதிய வசதியில்லாததால் மறுத்து விட்டனர்.

''இப்போது எங்களுக்கு வழங்கப்பட்டது, இந்த இடம் சுடுகாடுதான், இந்த சுடுகாட்டில்கூட வாழவிடாது விரட்டி முயற்சிக்கிறார்களே'' என்று பாதிக்கப்பட்ட தாயகம் திரும்பியோர் ஒருவர்தெரிவித்தார்,

(11ம் பக்கம் பார்க்க)